# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 10ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) சீன - ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?

**பதில் :** 1. 1894 இல் ஜப்பான் சீனாவின் மீது வலுக்கட்டாயமாக ஒரு போரை மேற்கொண்டது.
2. இச்சீன-ஜப்பானியப் போரில் சீனாவை சிறிய நாடான ஜப்பான் தோற்கடித்தது உலகை வியக்க வைத்தது.
3. இப்போரில் ஜப்பான் பெற்ற வெற்றி ஐரோப்பிய சக்திகளால் விரும்பப்படவில்லை.
4. தொடர்ந்து ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் எச்சரிக்கையை மீறி ஜப்பான் லியோடங் தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் இணைத்துக் கொண்டது.
5. இந்நடவடிக்கை மூலம் கிழக்கு ஆசியாவில் தானே வலிமை மிகுந்த அரசு என ஜப்பான் மெய்ப்பித்தது.

2) மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக

**பதில் :** மூவர் கூட்டு நாடுகள்: இங்கிலாந்து (பிரிட்டன்), பிரான்ஸ், ரஷ்யா

3) ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்றுவடிவங்கள் எவை?

**பதில் :** 1. ஆரவாரமான நாட்டுப்பற்று - இங்கிலாந்து
2. அதிதீவிரப்பற்று - பிரான்ஸ்
3. வெறிகொண்ட நாட்டுப்பற்று - ஜெர்மனி

4) பதுங்குக் குழிப்போர்முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

**பதில் :** 1. போர் வீரர்களால் தோண்டப்படும் பதுங்குக் குழிகள் எதிரிகளின் சுடுதலில் இருந்து தங்களைக் காத்துக் கொண்டு பாதுகாப்பாக நிற்க உதவின.
2. பிரதானப் பதுங்குக் குழிகள் ஒன்றோடொன்றும் பின்புறமுள்ள குழிகளோடும் இணைக்கப்பட்டிருக்கும்.
3. அவற்றின் வழியாக உணவு, ஆயுதங்கள், கடிதங்கள், ஆணைகள் ஆகியவை வந்து சேரும். புதிய வீரர்களும் வந்து சேர்வர்.

5) முஸ்தபா கமால் பாட்சா வகித்தப் பாத்திரமென்ன?

**பதில் :** 1. துருக்கி ஒருநாடாக மறுபிறவி எடுப்பதற்கு முஸ்தபா கமால் பாட்சாவின் உன்னதமான பங்கு முக்கியமானதாகும்.
2. அவர் துருக்கியை நவீனமயமாக்கி அதை எதிர்மறையான அங்கீகாரத்திலிருந்து மாற்றியமைத்தார்.

6) பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களைப் பட்டியலிடுக.

**பதில் :** 1. சங்கத்திற்கென்று இராணுவம் இல்லை என்பதால் தான் எடுத்த முடிவுகளை அதனால் நடைமுறைப்படுத்த இயலவில்லை.
2. "கூட்டுப்பாதுகாப்பு" எனும் கோட்பாட்டை நடைமுறையில் செயல்படுத்தவே முடியவில்லை.
3. இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகள் சங்கத்தின் ஆணைகளுக்குக் கட்டுப்பட மறுத்தபோது, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் மட்டுமே உறுதியாகச் செயல்படும் நிலையிலிருந்தன.

7) முதலாளித்துவம் சார்ந்த தொழில்களில் செல்வம் எவ்வாறு பயன்பட்டது?

**பதில் :** முதலாளித்துவம் சார்ந்த தொழில்களின் நோக்கம் மிகை உற்பத்தி செய்வதாகும். இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட உபரிச் செல்வம் மென்மேலும் தொழிற்சாலைகள் அமைக்கவும், இருப்புப்பாதை அமைக்கவும், நீராவிக் கப்பல்கள் கட்டவும் அல்லது இவை போன்ற பிறவற்றிற்கும் பயன்படுத்தப்பட்டது.

8) கொரியாவை ஜப்பான் 1910 ல் ஏன் இணைத்துக் கொண்டது?

**பதில் :** (i) 1905 க்கு பின்வந்த ஆண்டுகளில் கொரியாவின் உள்நாட்டு அயல்நாட்டு கொள்கைகளை ஜப்பான் கட்டுப்படுத்தியது
(ii) ஒரு முக்கியமான ஜப்பானியத் தூதரக அதிகாரி ஒரு கொரியரால் கொல்லப்பட்டதைக் காரணமாக கொண்டு 1910ம்

(ii) ஒரு முக்கியமான ஜப்பானியத் தூதரக அதிகாரி ஒரு கொரியரால் கொல்லப்பட்டதைக் காரணமாகக் கொண்டு 1910ம் ஆண்டு கொரியாவை ஜப்பான் இணைத்துக் கொண்டது

9) மைய நாடுகளை எதிர்த்த ஒன்பது நேச நாடுகளின் பெயர்களை எழுதுக

**பதில் :** மைய நாடுகளை எதிர்த்த நேசநாடுகள் ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, அமெரிக்கா, பெல்ஜியம், ருமேனியா, செர்பியா, கிரீஸ் ஆகிய ஒன்பது நாடுகளாகும்

10) முதலாளித்துவம் சார்ந்த தொழில்களின் உபரிச் செல்வம் எவற்றிற்குப் பயன்படுத்தப்பட்டது?

**பதில் :** முதலாளித்துவம் சார்ந்த தொழில்களின் நோக்கம் மிகை உற்பத்தி செய்வதாகும். இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட உபரிச் செல்வம் மென்மேலும் தொழிற்சாலைகள் அமைக்கவும் இருப்புப்பாதைகள் அமைக்கவும் நீராவிக்கப்பல்கள் கட்டவும் அல்லது இவை போன்ற பலவற்றிற்கும் பயன்படுத்தப்பட்டது.

11) ஏகாதிபத்தியத்தின் முக்கியப் பண்புக்கூறுகள் யாவை?

**பதில் :** 1. முதலாளித்துவம் தவிர்க்க இயலாமல் ஏகாதிபத்தியத்திற்கு இட்டுச் செல்கிறது.
2. முதலாளித்துவத்தின் உச்சக்கட்டமே ஏகாதிபத்தியமாகும்.
3. மிகப்பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்குச் சந்தைகள் மட்டுமல்லாது பெருமளவிலான கச்சாப்பொருள்களும் தேவைப்பட்டன.
4. ஏகாதிபத்தியம் என்பது காலனிகளை பற்றியது மட்டுமல்ல, அது ஒரு முழுமையான முறையாக இராணுவமயமாக்கத்திற்கும் முழுமையான போருக்கும் இட்டுச் சென்றது.

12) ஜப்பான் எவ்வாறு வல்லரசுகளின் கவர்ச்சி மிகுந்த கூட்டணியில் நுழைந்தது?

**பதில் :** 1. ஜப்பான் தொழில்துறையில் சிறந்த நாடாகவும் அதே சமயத்தில் ஒரு ஏகாதிபத்திய சக்தியாகவும் ஆகியது.
2. ஆனால் ரஷ்யா ஜப்பானைக் குறைத்து மதிப்பிட்டது.
3. 1904 இல் தொடங்கிய ரஷ்ய - ஜப்பானியப் போரில் ஜப்பான், ரஷ்யாவைத் தோற்கடித்தது.
4. இப்போருக்குப்பின் ஜப்பான் வல்லரசுகளின் கவர்ச்சிமிகுந்த கூட்டணியில் நுழைந்தது.

13) மைய நாடுகள் யாவை?

**பதில் :** 1. ஜெர்மனி
2. ஆஸ்திரிய
3. ஹங்கேரி
4. இத்தாலி
5. பல்கேரியா
6. துருக்கி

14) பன்னாட்டுச் சங்கத்தின் தொடக்ககால நிரந்தர உறுப்பு நாடுகள் யாவை?

**பதில் :** 1. பிரிட்டன்
2. பிரான்ஸ்
3. இத்தாலி
4. ஜப்பான்
5. அமெரிக்கா

15) முதல் உலகப் போரில் அமெரிக்கா ஈடுபட்டதற்கான காரணம் என்ன?

**பதில் :** 1. 1917 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் நடுநிலை நாடுகளின் கப்பல்களையும் மூழ்கடிக்கப் போவதாக ஜெர்மனி அறிவித்தது.
2. லூசிடானியா என்னும் அமெரிக்கக் கப்பல் ஜெர்மனியின் நீர்மூழ்கிக்கப்பலால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது. இதன் விளைவாக பல அமெரிக்கர்கள் உயிரிழந்தனர்.

## 5 மதிப்பெண் வினாக்கள் 4 x 5 = 20

16) முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி?

பதில் : **வல்லரசுகளின் இரு அணிகள்:**

1. 1900 இல் ஐரோப்பிய வல்லரசுகளில் ஐந்து அரசுகள், இரண்டு ஆயுதமேந்திய முகாம்களாகப் பிரிந்தன.

2. ஒரு முகாமில் மையநாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரிய - ஹங்கேரி இத்தாலி ஆகியன 1882 இல் மூவர் உடன்படிக்கையை மேற்கொண்டன.

3. மற்றொரு முகாமில் இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய மூவரைக் கொண்ட மூவர் கூட்டு உருவாக்கப்பட்டது.

**வன்முறை சார்ந்த தேசியம்:**

1. ஒரு நாட்டின் மீதான பற்று மற்றொரு நாட்டை வெறுக்கும் தேவையை ஏற்படுத்தியது.

2. இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று பிரான்சின் அதி தீவிரப்பற்று,ஜெர்மனியின் வெறிகொண்ட நாட்டுப்பற்று ஆகிய அனைத்தும் தீவிர தேசியமாக போர் வெடிப்பதற்கு தீர்மானமாக பங்காற்றியது.

**ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பான்மை:**

1. ஜெர்மன் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியம் ஆக்கிரமிப்பு ஜெர்மனியே உலகத்தின் தலைவன் எனப் பிரகடனம் செய்தார்.

2. ஜெர்மனியின் கடற்படை விரிவுபடுத்தப்பட்டது.

3. ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு இயல்பு கொண்ட அரசியல் விவேகத்தையும், விரைவாகக் கட்டப்படும் கப்பற்படை தளங்களையும் கண்ணுற்ற இங்கிலாந்தும் கப்பற்படை விரிவாக்கப் போட்டியில் இறங்கியது.

4. இதனால் இரு நாடுகளுக்குமிடையே பதற்றம் மேலும் அதிகரித்தது.

**பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை:**

1. பிரான்சும் ஜெர்மனியும் பழைய பகைவர்களாவர்.

2. 1871இல் ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்ட பிரான்ஸ் அல்சேஸ், லொரைன் பகுதிகளை ஜெர்மனியிடம் இழக்க நேரிட்டது

3. ஜெர்மன் பேரரசர் இரண்டாம்கெய்சர்வில்லியம்மொராக்கோ சுல்தானின் சுதந்திரத்தை அங்கீகரித்ததோடு மொராக்கோவின் எதிர்காலம் குறித்து முடிவு செய்யப் பன்னாட்டு மாநாடு ஒன்றைக் கூட்டும்படி கோரினார்

**பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல்:**

1. 1908இல் துருக்கியில் ஒரு வலுவான, நவீனஅரசை உருவாக்கும் முயற்சியாக இளம்துருக்கியர் புரட்சி நடைபெற்றது. இது ஆஸ்திரியாவுக்கும் ரஷ்யாவிற்கும் பால்கன் பகுதிகளில் தங்கள் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கும் வாய்ப்பினை வழங்கியது.

2. ஆஸ்திரியா செர்பியாவின் மீது படையெடுக்கும்போது அதன் விளைவாக செர்பியாவிற்கு ரஷ்யா உதவுமானால் ஆஸ்திரியாவிற்கு ஆதரவாக நான் களமிறங்கும் என ஜெர்மனி அறிவித்தது.

**பால்கன் போர்கள்:**

1. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் துருக்கியப் பேரரசின் உறுதியற்ற அரசியல், பொருளாதாரச் சூழலைச் சாதகமாகக் கொண்டு கிரீசும் அதனைத் தொடர்ந்து ஏனைய நாடுகளும் ஒன்றன்பின் ஒன்றாக தங்களைத் துருக்கியின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துக் கொண்டன.

2. மாசிடோனியா பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்களைக் கொண்டிருந்தது. எனவே மாசிடோனியாவை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பால்கன் நாடுகளுக்கிடையே போட்டி நிலவியது.

3. 1912 ஆம் ஆண்டு பால்கன் கழகம் எனும் அமைப்பை உருவாக்கின. இக்கழகம் முதல் பால்கன் போரில் துருக்கியப் படைகளைத் தாக்கித் தோற்கடித்தது.

**உடனடிக் காரணம்:**

1. 1914 ஆம் ஆண்டு ஆஸ்திரிய இளவரசர் பிரான்ஸ் பெர்டினாண்டு, பிரின்ஸப் என்ற பாஸ்னிய செர்பியனால் கொலை செய்யப்பட்டார்.

2. ஆஸ்திரியா இதனை செர்பியாவைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்பாக எண்ணியது.

3. ஆஸ்திரியாவிற்கு ஆதரவாக ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளுக்கு எதிராகப் போர் செய்ய திட்டமிட்டது.

4. பெல்ஜியத்தின் நடுநிலைமையை மதியாது அதனை ஜெர்மனி தாக்கியதால் இப்போரில் இங்கிலாந்து பங்கேற்பது கட்டாயமாயிற்று.

17) ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக்காட்டுக.

**பதில் :** 1. போரைத் தொடங்கிய குற்றத்தைச் செய்தது ஜெர்மனி என்பதால் போர் இழப்புகளுக்கு ஜெர்மனி இழப்பீடு வழங்க வேண்டும்.

2. ஜெர்மன் படை 1,00,000 வீரர்களை மட்டுமே கொண்டதாக அளவில் சுருக்கப்பட்டது. சிறிய கப்பற்படை ஒன்றை மட்டுமே வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

3. ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய இரண்டின் ஒருங்கிணைப்பு தடைசெய்யப்பட்டது.

4. ஜெர்மனியின் அனைத்துக் காலனிகளும் பன்னாட்டுச் சங்கத்தின் பாதுகாப்பு நாடுகளாக ஆக்கப்பட்டன.

5. ரஷ்யாவுடன் செய்துகொள்ளப்பட்ட பிரெஸ்ட்-லிடோவஸ்க் உடன்படிக்கையையும் பல்கேரியாவுடன் மேற்கொள்ளப்பட்ட புகாரெஸ்ட் உடன்படிக்கையையும் திரும்பப் பெற்றுக்கொள்ள ஜெர்மனி வற்புறுத்தப்பட்டது.

6. அல்சேஸ்-லொரைன் பகுதிகள் பிரான்சுக்குத் திருப்பித் தரப்பட்டன.

7. முன்னர் ரஷ்யாவின் பகுதிகளாக இருந்த பின்லாந்து, எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகியன சுதந்திர நாடுகளாகச் செயல்பட அனுமதிக்கப்பட்டது.

8. வடக்கு ஷ்லெஸ்விக் டென்மார்க்கிற்கும் சிறிய மாவட்டங்கள் பெல்ஜியத்திற்கும் வழங்கப்பட்டன.

9. போலந்து மீண்டும் உருவாக்கப்பட்டது.

10. நேசநாடுகளின் ஆக்கிரமிப்பின்கீழ் ரைன்லாந்து இருக்கும் என்றும், ரைன்நதியின் கிழக்குக்கரைப் பகுதி படை நீக்கம் செய்யப்பட்டப் பகுதியாக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

18) அமைதி உடன்படிக்கை பற்றிய விமர்சனம் பற்றி [ஏதேனும் ஐந்து] எழுதவும்

**பதில் : அமைதி உடன்படிக்கை பற்றிய விமர்சனம்:**

(i) தோல்வியடைந்த நாடுகள் பேச்சு வார்த்தையில் பங்கேற்கவில்லை. அமைதி உடன்படிக்கை கட்டளையிடப்பட்டதாக இருந்தது. அது போரின் ஆதாயங்கள் வெற்றி பெற்றவருக்கே நேசநாடுகளே வெற்றியாளர்கள் எனும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருந்தது

(ii) அமைதியை மீட்பதற்காக உட்ரோ வில்சனால் முன் வைக்கப்பட்ட பதினான்கு அம்சத் திட்டம் எனும் கோட்பாடு ஜெர்மானியம் தவிர்த்து மீதமுள்ள அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட்டது

(iii) போர் இழப்பீட்டுத் தொகையான 6600 மில்லியன் பவுண்டுகள் ஜெர்மனியின் செலுத்தும் சக்தியைக் காட்டிலும் மிக அதிகமாக இருந்தது

(iv) அரசியல் பொருளாதார ரீதியாக ஜெர்மனி பலவீனப்படுத்தப்பட்டது. ஆனால் ஜெர்மனி தனது கிழக்கெல்லையில் மிகப்பெரும் ரஷ்யா, ஆஸ்திரிய ஹங்கேரிப் பேரரசுகளுக்குப் பதிலாக தற்போது சிறிய பலவீனமான புதிய நாடுகளை கொண்டிருந்தது

(v) ஜெர்மனியருக்கும் ஆஸ்திரியார்களுக்கும் பல வாக்குறுதிகளை வழங்கிய வில்சன் அவற்றிக்கு துரோகமிழைத்து விட்டார். 1920 ல் வெர்செயல்ஸ் உடன்படிக்கையை செனட்சபை ஏற்றுக்கொள்ள மறுத்ததைத் தொடர்ந்த அமெரிக்கா தனித்திருக்கும் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கியது மிகவும் வலுவிழந்த நிலைமையிலிருந்த பிரான்ஸ் மட்டும் இங்கிலாந்தின் நல்லுதவியுடன் ஆற்றல் மிக்க ஜெர்மனியின் வலிமையை எதிர்கொள்ள நேர்ந்தது

19) கடற்போர்களும் போரில் அமெரிக்க பங்கேற்றலும் பற்றி விவரி.

**பதில் : கடற்போர்கள்:**

1. 1916 இல் வடகடலில் கடற்போர் (ஜுட்லேண்டு போர்) நடைபெற்றது. இங்கிலாந்து இப்போரில் வெற்றி பெற்றது.

2. இதன் பின்னர் ஜெர்மனியர் தங்களின் நீர்மூழ்கிப் போரைத் தொடங்கினர். அவை நேசநாடுகளின் கப்பல்களுக்கு இடையூறு செய்தன.

3. புகழ்பெற்ற எம்டன் கப்பல் சென்னை மீது குண்டுகளை வீசியது.

4. தங்கள் கப்பல்களின் போக்குவரத்தை இடைமறித்துத் தடை செய்த நடவடிக்கைகளுக்கு எதிர்நடவடிக்கையாக 1917ல் நடுநிலை நாடுகளின் கப்பல்களையும் மூழ்கடிக்கப்போவதாக ஜெர்மனி அறிவித்தது.

5. இதன் பொருள் இங்கிலாந்தின் கடல்பகுதியில் பயணிக்கும் எந்தக் கப்பலாக இருந்தாலும் அவை ஜெர்மானிய நிர்மூழ்கிக் கப்பல்களால் தாக்கப்படும் என்பதே ஆகும்.

**போரில் அமெரிக்கா பங்கேற்றல்**

1. லூசிடானியா என்னும் அமெரிக்கக் கப்பல் ஜெர்மனியால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது.

2. இதன் விளைவாக பல அமெரிக்கர்கள்' உயிரிழந்தனர். அதனால் அமெரிக்காவில் பெருங்கோபமும் சீற்றமும் ஏற்பட்டது.

3. குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சன் ஜெர்மனிக்கு எதிராக 1917 இல் போர்ப்பிரகடனம் செய்தார். மாபெரும் பொருளாதார பலத்தோடு அமெரிக்கா போரில் இறங்கியது.

4. அது நேசநாடுகளின் வெற்றியை முன்னரே எழுதப்பட்ட முடிவுரையாயிற்று.